**உள்ளடக்கம்**

**பக்க இல.**


| | |
|---|---|
| ➢ தொலை நோக்கு | 02 |
| ➢ செயற்பணி | 02 |
| 1. அறிமுகம் | 03 |
| 2. முக்கிய தொழிற்பாடுகள் | 03 |
| 3. நிறுவனக் கட்டமைப்பு | 04 |
| 4. பதவியணி தொடர்பான தகவல்கள் | 05 |
| 5. மனித வள அபிவிருத்தி | 06 |
| 6. நிதிச் செயலாற்றுகை | 11 |
| 7. பௌதிகச் செயலாற்றுகை | 13 |
| 7.1 காசு முகாமை | 13 |
| 7.2 பொதுப் படுகடன் முகாமை | 16 |
| 7.3 வெளிநாட்டு உதவி முகாமை | 22 |
| 7.4 அரசாங்க வருமானம் | 23 |
| 7.5 திறைசேரி தனிக் கணக்கு முறைமை, திறைசேரி நிதி முகாமை முறைமை என்பவற்றின முன்னேற்றம் | 26 |
| 7.6 ஆதனக் கடன் உத்தரவாத நிதியம் | 29 |

## ➢ *எமது நோக்கு*

*"தென்னாசியப் பிராந்தியத்தில் மிகச் சிறந்த அரசாங்க நிதி முகாமையாளராகத் திகழ்தல்"*

## ➢ *எமது பணி*

*" திரட்டு நிதியத்திற்கும் ஏனைய திறைசேரி நிதியங்களுக்கும் சொந்தமான நிதிகளைக் கையாள்வதில் வினைத்திறனையும் சிக்கனத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்காகவும் வெளிநாட்டுக் கடன்பெறுகைகள் உள்ளிட்ட நிதிக் கணக்கீட்டுக்கு தலைமைத்துவம் வழங்கும் அதவேளை அரசாங்க செலவினங்களை அரசிறைத் திட்டங்கள் மற்றும் கடன்பெறுகை நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஏற்ற வகையில் வரையறுப்பதற்காகவும் அர்ப்பணிப்புடன் செயற்படுதல்".*


## *1. அறிமுகம்*

*திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களமானது திரட்டு நிதியம் (திறைசேரி காசுப் பாய்ச்சல்), பொதுப் படுகடன் என்பவற்றின் முகாமையுடன் தொடர்புடைய விடயங்களைக் கையாள்வதற்கான வினைத்திறன்மிக்க நிறுவனம் ஒன்றை உருவாக்கும் நோக்கில் 2004 ஜூலை 28 ஆந் திகதி தாபிக்கப்பட்டது. இந்நோக்கத்தை நிறைவேற்றும் முயற்சியாக, தேசிய வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்படும் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினங்களை தொழிற்பாட்டு ரீதியான காசு உட்பாய்ச்சலாகவும் வெளிப்பாய்ச்சலாகவும் மாற்றுவதுடன் கடன்களூடாக நிதியிடப்பட வேண்டிய பற்றாக்குறைகளை அடையாளம் காணும் பணியை திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களம் மேற்கொள்கின்றது. அரசாங்கத்தின் இலக்காகக் கொள்ளப்பட்ட பெறுபேறுகளை அடைவதற்காக தேசிய வரவு செலவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக பயனுறுதி வாய்ந்த முன்னேற்றக் கண்காணிப்பை இலகுபடுத்தும் நோக்கில் மதிப்பிடப்பட்ட வருடாந்த உட்பாய்ச்சல்களும் வெளிப்பாய்ச்சல்களும் முதலில் மாதாந்தப் பெறுமானங்களாகவும் பின்னர் நாளாந்தப் பெறுமானங்களாகவும் பிரிக்கப்படுகின்றன. தீர்மானிக்கப்பட்ட இலக்குகளிலிருந்து விலகல்கள் ஏற்படும் சாத்தியம் காணப்படுமாயின், நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காகப் பொருத்தமான உபாயங்களைக் கைக்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரைகள் வழங்கப்படும்.*

## *2. முக்கிய தொழிற்பாடுகள்*

- திறைசேரியின் காசுப் பாய்ச்சல் முகாமை
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்பெறுகைகளுக்கான வசதி ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தல்.
- கொடுப்பனவு முறைகளின் ஊடாக திறைசேரி நிதிகளைப் பகிர்ந்தளித்தல்.
- செலவீட்டு முகவரகங்களுக்கான நிதிகளை மதிப்பீடு செய்தல், முன்னுரிமைப்படுத்தல், விடுவித்தல்.
- திறைசேரி உத்தரவாதங்களை வழங்குதல்
- அரசாங்கத்தின் கடன் வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்களுடன் தொடர்புடைய நிதிப் பாய்ச்சல்களைத் தொழிற்படுத்துதல்.
- வரியல்லாத வருமானங்களை 10 தலைப்புக்களின் கீழ் மதிப்பீடு செய்து, சேகரித்து கணக்கீடுசெய்தல்.
- வெளிநாட்டு உதவிக் கடன்கள் மற்றும் நன்கொடைகளின் கீழான நிதிகளின் விடுவிப்புக்கான ஏற்பாடுகளைச் செய்தல்.
- அரசாங்கத்தின் கடன்பெறுகைகள் மற்றும் படுகடன் மீளளிப்புக்களை கணக்கீடு செய்தல்.
- அரசாங்கத்தின் வங்கிக் கணக்குகளுக்கும் கட்டுநிதிக் கணக்குகளுக்கும் அதிகாரமளித்தலும் அவற்றை மேற்பார்வை செய்தலும்.
- வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களின் கணக்கீட்டுக்கான வசதி ஏற்பாடுகளைச் செய்தல்.

# 3. நிறுவனக் கட்டமைப்பு



## *4. பதவியணி தொடர்பான தகவல்கள்*

அட்டவணை 4 (அ) 2016.12.31 ஆந் திகதியில் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை

| பதவி | அனுமதிக்கப்பட்ட பதவியணி | தற்போதுள்ள ஊழியர் தொகை |
|---|---|---|
| பணிப்பாளர் நாயகம் | 1 | 1 |
| மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | 3 | 2* |
| இ.க.சே - வகுப்பு I | 9 | 7 |
| இ.க.சே - வகுப்பு II/III | 8 | 9 |
| இ.நி.சே. - வகுப்பு III | 1 | 1 |
| நிர்வாக உத்தியோகத்தர் | 1 | 1 |
| அபிவிருத்தி உதவியாளர் | 20 | 16 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் -வகுப்பு I/II/III | 55 | 48 |
| தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் உதவியாளர் | 7 | 1 |
| சாரதிகள் | 8 | 8 |
| அலுவலக உதவியாளர் - வகுப்பு I/II/III | 12 | 12 |
| மொத்தம் | 125 | 106 |

* இலங்கை கணக்காளர் சேவையின் தரம் I இலுள்ள உத்தியோகத்தரொருவர் விசேட தரத்திற்குரிய பதவியான மேலதிகப் பணிப்பாளர் நாயகமாகப் (பதில் கடமை) பணியாற்றுகின்றார்.

## *5. மனித வள அபிவிருத்தி*

அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை மேம்படுத்தும் நோக்கில் இத்திணைக்களம் தனது உத்தியோகத்தர்களைப் பின்வரும் அட்டவணையில் உள்நாட்டு காட்டப்பட்டுள்ள பல் பயிற்சி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகளில் பங்கேற்கச் செய்தது.

## அட்டவணை 5 (அ) உள்நாட்டுப் பயிற்சிகள் 2016

| ஊழியர் வகுதி | பயிற்சிநெறிகளின் எண்ணிக்கை | பயிற்சியளிக்கப்பட்ட உத்தியோகத்தளின் எண்ணிக்கை | பயிற்சித் துறை | நிறுவனம்/அமை விடம் |
|---|---|---|---|---|
| பதவிநிலை உத்தியோகத்தர்கள் | 06 | 09 | கணக்காய்வுத் தரத்தை மேம்படுத்துதல் | SLAASMB |
| | | 05 | பொதுப் பெறுகைகள் தொடர்பான சான்றிதழ் நிகழ்ச்சி | மிலோதா |
| | | 05 | பேரண்டப் பொருளாதாரச் செயற்பாடுகள் மற்றும் தொடர்புகள் | மிலோதா |
| | | 03 | அறிமுகப் பாடநெறி நிதிச் சந்தை | USAID |
| | | 01 | அரச தனியார் பங்குடமை பற்றிய மாநாடு தகவல் | பொது நிதித் திணைக்களம் |
| | | 01 | தொழில்நுட்பமல்லாத நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கான அத்தியவசிய தகவல் தொழில்நுட்பம் | மிலோதா |

| | | | | |
|---|---|---|---|---|
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 09 | 02<br>01<br>01<br>02<br>05<br>07<br>03<br>01<br>06 | கனிஷ்ட உத்தியோகத்தர்களுக்கான ஆங்கில டிப்ளோமா<br>அரச துறையில் நிதிப் பிரமாணங்கள்<br>முறையாக கடிதம் எழுதும் திறன்கள்<br>பொது பெறுகைகள் முகாமை<br>கணனிச் சாரதிச் சான்றிதழ்<br>கணனிமயப்படுத்தப் பட்ட அரசாங்க சம்பளப் பட்டியல் முறைமை<br>CIGAS<br>மனப்பாங்கு மற்றும் திறன் விருத்தி தொடர்பான செயலமர்வு<br>தாபனக் கோவை மற்றும் அதன் பிரயோகங்கள் | மிலோதா<br>மிலோதா<br>மிலோதா<br>மிலோதா<br>இ.அ.நி.நி<br>மிலோதா<br>மிலோதா<br>IHRA<br>மிலோதா |
| சாரதிகள் | 02 | 08<br>04 | சாரதிகளுக்கான பயிற்சி<br>ஒரு நாள் பயிற்சிநெறி | பெர்ஜயா ஹோட்டல், கல்கிஸ்ஸை<br>நிர்மாண உபகரணப் பயிற்சி நிலையம் |
| அனைத்து உத்தியோகத்தர்களும் | 01 | 100 | தேசிய சுற்றாடல் தினம் தொடர்பான கருத்தரங்கு | ரண்டோரா கேட்போர் கூடம் |

மேலும், இவ்வருடத்தில் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சிகளிலும் மாநாடுகளிலும் பங்கேற்பதற்கான 16 வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன.

## அட்டவணை 5 (ஆ) - 2016 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட வெளிநாட்டுப் பயிற்சிகள் மற்றும் பங்கேற்ற மாநாடுகள்

| | பயிற்சி/கருத்தரங்கு அல்லது மன்றம் | நாடு | காலப் பகுதி | உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | ஆசிய பசுபிக் அபிவிருத்திக்கான நிதியீட்டக் கலந்துரையாடலுக்கான முதலாவது உயர் மட்ட பின் தொடர் கூட்டம் | கொரியா | 30.03.2016 - 31 .03.2016 | 01 |
| 2. | டிஜிட்டல் பொருளாதாரத்தில் நிதியியல் உள்ளடக்கம் | பிலிப்பைன்ஸ் | 24.05.2016- 25 .05.2016 | 01 |
| 3. | அரசிறை மற்றும் படுகடன் முகாமைச் செயலமர்வு | மலேசியா | 13.06.2016 - 17 .06.2016 | 01 |
| 4. | பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகள் தொடர்பான நிறைவேற்றுப் பயிற்சி நிகழ்ச்சி, ஹொங் கொங் பல்கலைக்கழகம் | ஹொங் கொங் | 12.07.2016- 16 .07.2016<br>01.08.2016- 05.08.2016 | 03<br>04 |
| 5. | சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கான பொது நிதி முகாமை/ அரசாங்கப் படுகடன் முகாமை தொடர்பா நிறைவேற்று நிகழ்ச்சி | ஜப்பான் | 24 .07.2016- 06 .08.2016 | 01 |
| 6. | நிதிச் சந்தைப் பகுப்பாய்வுப் பயிற்சிநெறி | சிங்கப்பூர் | 01.08.2016 - 12.08.2016 | 01 |
| 7. | ADB அரச துறை கணக்கீடு தொடர்பான பிராந்திய மன்றம் | தாய்லாந்து | 11.10.2016 - 12.10.2016 | 01 |
| 8. | நாணயப் படுகடன் முகாமை - மன்றம் | வொஷிங்டன் | 19 .10.2016- 20 .10.2016 | 01 |
| 9. | நாணயப் பொறுப்புக்கள் மற்றும் அபாயச் சாத்திய முகாமை | சிங்கப்பூர் | 24.10.2016- 28.10.2016 | 01 |
| 10. | CIPFA சர்வதேச கருத்தரங்கு 2016 | லக்சம்பேர்க் | 24 .11.2016- 25.11.2016 | 01 |

## 5. (இ) சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்கள்

அரசாங்கத்தின் நிதி முகாமையை மேம்படுத்தும் நோக்கில் இத்திணைக்களம் 2016 ஆம் ஆண்டில் பின்வரும் சுற்றறிக்கைகளை வெளியிட்டது.

| திகதி | சுற்றறிக்கை இல. | தலைப்பு |
|---|---|---|
| 29.01.2016 | TOD-01-2016 | அரசாங்க ஊழியர்களின் மாதாந்த சம்பளக் கொடுப்பனவு |
| 31.05.2016 | TOD-03-2016 | வருமானம் நிலுவைகள் கூற்று - 30.06.2016 |
| 31.05.2016 | TOD-04-2016 | 2017 ஆம் ஆண்டுக்கான வருமான மதிப்பீடுகள் |
| 15.09.2016 | TOD-05-2016 | 2017 ஆம் ஆண்டுக்கான சம்பளங்கள், சம்பள முற்பணங்கள், ஓய்வூதியங்கள் என்பவற்றைச் செலுத்துதல் |
| 09.09.2016 | TOD-05-2015(I) | 2016 ஒக்டோபர் மாதத்தில் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான சம்பளத் திகதியை முற்படுத்துதல் |
| 20.10.2016 | TOD-06-2016 | அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகளில் உள்ள தேங்கியுள்ள காசு மீதிகளைப் பராமரித்தல் |
| 18.11.2016 | TOD-07-2016 | 2016 ஆம் ஆண்டுக்கான காசேடுகளை முடிவுறுத்துதல் மற்றும் கட்டுநிதிக் கணக்குகளைத் தீர்த்தலும் |
| 01.12.2016 | TOD-08-2016 | 2017 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டுச் சட்டத்தில் செய்யப்பட்டுள்ள வரவு செலவுத் திட்ட ஏற்பாடுகளின் கீழ் கொடுப்பனவுகளைச் செய்வதற்காக ஒவ்வொரு திணைக்களத்திற்குமான வருடாந்தம் கட்டுநிதி |

| | | |
|---|---|---|
| | | வரையறைகளைத் தீர்மானிப்பதற்கான தகவல் சேகரிப்பு. |
| 09.12.2016 | TOD-09-2016 | வருமானம் நிலுவைகள் கூற்று - 30.12.2016 |

## 6. நிதிச் செயலாற்றுகை 2016

ரூபா

| விடயம் | வகை/பொருள்/விடயம்/விபரம் | 2015 | | 2016 | | 2015 ஆம் ஆண்டின் உண்மைச் செலவினங்களின் அடிப்படையில் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பீடு | உண்மையான | மதிப்பீடு | உண்மையான | 2016 ஆம் ஆண்டின் செலவின அதிகரிப்பு (வீழ்ச்சி) | செலவின வேறுபாட்டு வீதம் |
| | மீளெழும் செலவுகள் | 976,675 | 810,593 | 1,120,500 | 1,048,233 | 237,640 | 29.32 |
| | **ஆள்சார் வேதனாதிகள்** | **55,980** | **53,954** | **67,650** | **64,704** | **10,750** | **19.92** |
| 1001 | சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் | 26,000 | 24,583 | 33,200 | 32,878 | 8,295 | 33.74 |
| 1002 | மேலதிக நேர மற்றும் விடுமுறைக் கொடுப்பனவுகள் | 600 | 428 | 600 | 519 | 91 | 21.26 |
| 1003 | ஏனைய படிகள் | 29,380 | 28,943 | 33,850 | 31,307 | 2,364 | 8.17 |
| | **பிரயாணச் செலவுகள்** | **940** | **876** | **1,615** | **1,606** | **730** | **83.33** |
| 1101 | உள்நாட்டு | 100 | 71 | 115 | 109 | 38 | 53.52 |
| 1102 | வெளிநாட்டு | 840 | 805 | 1,500 | 1,497 | 692 | 85.96 |
| | **வழங்கல்கள்** | **3,805** | **3,775** | **4,550** | **4,456** | **681** | **18.04** |
| 1201 | எழுது பொருட்கள் மற்றும் அலுவலகத் தேவைகள் | 1,700 | 1,678 | 2,500 | 2,423 | 745 | 44.40 |
| 1202 | எரிபொருள் | 2,030 | 2,025 | 1,975 | 1,961 | (64) | (3.16) |
| 1203 | உணவு மற்றும் சீருடைகள் | 75 | 72 | 75 | 72 | - | - |
| | **பராமரிப்புச் செலவினம்** | **2,175** | **1,621** | **2,323** | **1,802** | **181** | **11.17** |
| 1301 | வாகனம் | 1,410 | 937 | 1,650 | 1,545 | 608 | 64.89 |
| 1302 | பொறி இயந்திரம் மற்றும் உபகரணங்கள் | 465 | 451 | 500 | 205 | (246) | (54.55) |
| 1303 | கட்டடங்கள் மற்றும் கட்டமைப்புக்கள் | 300 | 233 | 173 | 52 | (181) | (77.68) |
| | **சேவைகள்** | **3,275** | **3,249** | **3,792** | **3,769** | **520** | **16.00** |
| 1401 | போக்குவரத்து | 1,375 | 1,374 | 1,805 | 1,802 | 428 | 31.15 |
| 1402 | தபால் மற்றும் தொடர்பாடல் | 1,775 | 1,756 | 1,850 | 1,833 | 77 | 4.38 |
| 1405 | ஏனையவை | 125 | 119 | 137 | 134 | 15 | 12.61 |
| | **மாற்றல்கள்** | **910,500** | **747,118** | **1,040,570** | **971,896** | **224,778** | **30.09** |
| 1503-01 | லொத்தர் அபிவிருத்தி மானிய அளவீடுகளின் மீளளிப்பு | 509,450 | 346,105 | 539,420 | 470,992 | 124,887 | 36.08 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1505-01 | அரசாங்க ஊழியர் காப்புறுதித் திட்டத்திற்கான அரசாங்கத்தின் பங்களிப்பு | 400,000 | 400,000 | 500,000 | 500,000 | 100,000 | 25.00 |
| 1506 | அரசாங்க ஊழியர்களின் சொத்துக் கடன்களுக்கான வட்டி | 1,050 | 1,013 | 1,150 | 904 | (109) | (10.76) |

ரூபா '000

| விடயம் | வகை/பொருள்/ விடயம்/விபரம் | 2015 | | 2016 | | 2015 ஆம் ஆண்டின் உண்மைச் செலவினங்களின் அடிப்படையில் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பீடு | உண்மை யான | மதிப்பீடு | உண் மை யான | 2016 ஆம் ஆண்டின் செலவின அதிகரிப்பு (வீழ்ச்சி) | செலவின வேறுபாட்டு வீதம் |
| | மூலதனச் செலவினம் | 6,300 | 5,350 | 9,140 | 8,929 | 3,579 | 66.90 |
| | **மூலதன சொத்துக்களின் புனரமைப்பும் மேம்பாடும்** | **1,700** | **1,609** | **1,700** | **1,521** | **(88)** | **(5.47)** |
| 2001 | கட்டடப் புனரமைப்பும் மேம்பாடும் | 100 | 83 | 100 | 21 | (62) | (74.70) |
| 2002-1 | திறைசேரி தனிக் கணக்கு முறைமையின் அமுலாக்கம் | 1,000 | 981 | 1,000 | 981 | - | - |
| 2002-2 | ஏனையவை | 100 | 51 | 100 | 34 | (17) | (33.33) |
| 2003 | வாகனம் | 500 | 494 | 500 | 485 | (9) | (1.82) |
| | **மூலதனச் சொத்துக்களின் கொள்ளல்** | **2,800** | **1,950** | **6,440** | **6,415** | **4,465** | **228.97** |
| 2102 | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 2,800 | 1,950 | 6,440 | 6,415 | 4,465 | 228.97 |
| | **மனித வள அபிவிருத்தி** | **1,800** | **1,791** | **1,000** | **993** | **(798)** | **(44.56)** |
| 2401 | பயிற்சியும் திறன்விருத்தியும் | 1,800 | 1,791 | 1,000 | 993 | (798) | (44.56) |

# 7. பௌதிகச் செயலாற்றுகை

## 7.1 காசு முகாமை

### 7.1.1 திறைசேரி காசுப் பாய்ச்சல் முகாமை

திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களமானது வரவுசெலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட கொள்கை குறிக்கோள்களை அடைவதற்காக அரசாங்க நிதியை வினைத்திறன்மிக்க முறையில முகாமை செய்து கடன்பெறுகைச் செலவுகளைக் குறைப்பதற்காக 2016 ஆம் ஆண்டில் வினைத்திறன்மிக்க காசுத் திட்டமிடல் மற்றும் முகாமை உபாயங்களைப் பின்பற்றியது. இக்குறிக்கோள்களை அடையப் பெறுவதற்காக அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் என்பவற்றுக்கு உரிய காலங்களில் முன்னுரிமை அடிப்படையில் நிதியினை விடுவிப்பது திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களத்தின் அடிப்படையான பொறுப்புக்களில் ஒன்றாகும். அரசாங்கத்தினால் எதிர்பார்த்தது போன்று உரிய நேரத்தில் வருமானங்களைச் சேகரிக்க முடியாது போனமையினால் காசுக்கான கேள்வியைப் பூர்த்திசெய்தல் நடைமுறைச் சிக்கல்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டது. அதனால், வரவுசெலவுத் திட்டத்தை சுமுகமான முறையில் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நிதிகளை விடுவிக்கும் நோக்கில் ஒவ்வொரு அமைச்சினதும் திணைக்களத்தினதும் காசுத் தேவைகளை மதிப்பீடு செய்வது இத்திணைக்களத்தின் பிரதான பொறுப்புக்களில் ஒன்றாகக் காணப்பட்டது.

திறைசேரியின் காசுப் பாய்ச்ச்சலை வினைத்திறன்மிக்க முறையில் முகாமை செய்வதற்காக திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களம் எதிர்பார்க்கப்படும் வருடாந்த தொழிற்பாட்டுக் காசுப் பாய்ச்சல் முகாமைத் திட்டத்தைத் தயாரித்தது. எதிர்பார்க்கப்படும் காசு உட்பாய்ச்சல், காசு வெளிப்பாய்ச்சல் மற்றும் திட்டமிடப்பட்ட கடன்பெறுகைகள் என்பன உள்ளிட்ட இந்த வருடாந்தத் திட்டமானது பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீட்டுச் சட்டத்திற்கு இணஙக் மாதாந்த அடடிப்படையில் தயாரிக்கப்படுகின்றது.

இந்த வருடாந்த மற்றும் மாதாந்த காசுத் திட்டங்கள், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், சுங்கம், மதுவரி ஆகிய திணைக்களங்களினால் சமர்ப்பிக்கப்படும் எதிர்வுகூறல்களையும் முன்னைய மாதங்களின் சேகரிப்பு முறைகள், வருடாந்த மற்றும் மாதாந்த அடிப்படையில் அமைச்சுக்களாலும் திணக்களங்களாலும் எதிர்வுகூறப்படும் கட்டுநிதித் தேவைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டன. நாளாந்தம் இற்றைப்படுத்தப்படும் தொழிற்பாட்டுக் காசுப் பாய்ச்சல்களின் ஊடாக வினைத்திறன்மிக்க செலவின முகாமை, முன்னேற்றகரமான வருமானம் சேகரிப்பு என்பவற்றுடன் தொடர்புடைய கொள்கைசார் விடயங்கள் தொடர்பான பொருத்தமான தீர்மானங்களை எடுப்பதில் திறைசேரித் தொழிற்பாட்டுத் திணைக்களம் சிறந்த பங்களிப்பை வழங்கியது.

*திறைசேரியின் காசு முகாமைக்கான வருடாந்த வரவு செலவுத் திட்ட இலக்குகளை அடைவதற்கான செயன்முறைக்குத் தேவைப்படுகின்ற தீர்மானங்களை எடுப்பதற்கான உரிய நேரத்திலான அறிவுறுத்தல்கள் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக, 2016 ஆம் ஆண்டில் திறைசேரியின் செயலாளரின தலைமையில் நடாத்தப்பட்ட 21 காசுப் பாய்ச்சல் கூட்டங்களில், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கைச் சுங்கம், மதுவரித் திணைக்களம் என்பன போன்ற முக்கியமான வருமானம் சேகரிக்கும் திணைக்களங்களின் தலைவர்களும் தொடர்புடைய திறைசேரித் திணைக்களங்களின் , மதுவரித் திணைக்களம் என்பவற்றின் தலைவர்களும் உரிய நிறைவேற்று அதிகாரிகளும் பங்கேற்றனர்.*

முன்னைய வருடங்களைப் போன்று இவ்வருடத்திலும் வருமானத்திற்கும் செலவினங்களுக்கும் இடையிலான இடைவெளி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்பெறுகையின் மூலம் நிரப்பப்பட்டது.


### *7.1.2 திறைசேரி காசு உட்பாய்ச்சல்*

***அட்டவணை 7.1 (அ) வருமானம் சேகரிப்பு - 2016***

(ரூபா. மில்லியன்)

| | **மீளாய்வு செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல் மதிப்பீடு** | **உண்மையான காசுப் பாய்ச்சல்** | **%** |
|---|---|---|---|
| வரி வருமானம் | 1,457,000 | 1,446,375 | 99 |
| வரியல்லா வருமானம் | 172,301 | 168,294 | 98 |
| நன்கொடை | 588 | 1,536 | 261 |
| **மொத்த வருமானம்** | 1,629,889 | 1,616,205 | 99 |


**வரைபு 7.1 (அ) மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மை வருமானம் 2016**



***அட்டவணை 7.1 (ஆ) : வருமானம் சேகரித்தல் 2012 முதல் 2016 வரை*** (ரூபா மில்லியன்)

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|---|---|
| வரி வருமானம் | 833,520 | 920,225 | 987,712 | 1,270,065 | 1,446,375 |
| வரியல்லா வருமானம் | 124,359 | 102,447 | 97,237 | 63,046 | 168,294 |
| நன்கொடை | 3,171 | 2,307 | 2,495 | 1,540 | 1,536 |

**வரைபு 7.1 (ஆ) அரசாங்க வருமானத்தின் போக்கு 2012-2016**




அட்டவணை 7.1 (அ) இல் காட்டப்பட்டுள்ளது போன்று 2016 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் மொத்தம் மதிப்பிடப்பட்ட வருமானத்தின் 99 சதவீதமாகக் காணப்பட்டது. இது மொத்த மதிப்பீட்டில், 99% வரி வருமானத்தையும், 98% வரியல்லா வருமானத்தையும் 261% வெளிநாட்டு உதவிகளையும் கொண்டிருந்தது.

திறைசேரியினால் வருமானம் சேகரிப்புக் கண்காணிப்பு பலப்படுத்தப்பட்டதன் விளைவாக, 2015 ஆம் ஆண்டில் 1,270,065 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட வரி வருமானம் சேகரிப்பு 2016 ஆம் ஆண்டில் 14% ஆல் அதிகரித்து 1,446,375 ஆகக் காணப்பட்டது. இதற்குப் பிரதான காரணம் பெறுமதி சேர் வரி அதிகரிக்கப்பட்டமையாகும். பல்தரப்பு மூலங்களிடமிருந்து கிடைத்த உதவிகளின் பங்கு குறைவடைந்ததன் காரணமாக வெளிநாட்டு உதவிகளின் மூலமான காசு உட்பாய்ச்சல் 1,536 மில்லியன் ரூபாவாக மாத்திரமே காணப்பட்டது. இந்த வகையில், 2016 ஆம் ஆண்டில் மொத்த வருமானத்தில் 90 சதவீதம் வரி வருமானமாகக் காணப்பட்டது. மீதி 10 சதவீதம் வரியல்லா வருமான மற்றும் நன்கொடைகள் மூலம் பெறப்பட்டது.

### *7.1.3 திறைசேரி காசு வெளிப்பாய்ச்சல்*

திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களமானது அரசாங்கத்தின் முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்துக்கு உதவியாக அமையும் விதத்தில் மூலதனச் செலவினங்களை எதிர்பார்க்கப்படும் பொருளாதார வளர்ச்சி மட்டத்தில் பேணி வருவதற்கான அரசாங்கத்தின் முயற்சிக்கும் பங்களிப்புச் செய்தது.
அரசாங்கத்தின் கடன்களுக்கான வட்டி உள்ளிட்ட மீளெழும் செலவுகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் அரசாங்க வருமானங்களை முகாமை செய்வது இத்திணைக்களத்தின் சவால்மிக்க பணிகளில் ஒன்றாக உள்ளது.

**அட்டவணை - 8.1 (இ) செலவீட்டு வகைகளின் கீழ் கட்டுநிதி விடுவிப்பு**

**ரூபா.மில்லியன்**

| | 2015 | 2016 |
|---|---|---|
| ஆள்சார் வேதனாதிகள் | 604,861 | 633,019 |
| ஓய்வூதியம் | 151,957 | 165,118 |
| சமுர்த்தி மற்றும் உர மானியங்கள் | 90,106 | 67,064 |
| ஏனைய மீண்டெழும் செலவுகள் | 243,324 | 236,579 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 530,869 | 602,765 |
| படுகடன் மீளச்செலுத்தல்கள் | 832,765 | 742,442 |
| மூலதனம் | 390,588 | 360,226 |

2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் தனிப்பட்ட வேதனாதிகள் மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுகளுக்கான கட்டுநிதி விடுவிப்புக்களில் குறிப்பிடத்தக்களவில் அதிகரிப்புக் காணப்படவில்லை. எவ்வாறாயினும், படுகடன் சேவைகளுக்காக 1,345,207 மில்லியன் ரூபா பயன்படுத்தப்பட்டது. இது 2015 ஆம் ஆண்டை விட 14% அதிகரிப்பாகும். இப்படுகடன் சேவை அதிகரிப்புக்கு வட்டி வீதத்தின் அதிகரித்துச் செல்லும் போக்கு, ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் பெறுமதி குறைந்தமை என்பனவும் பங்களிப்புச் செய்தன. மூலதனச் செலவினத்திற்கான கட்டுநிதி விடுவிப்புக்களும் 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 8% ஆல் அதிகரித்திருந்தது.

## 7.2 பொதுப் படுகடன் முகாமை

### 7.2.1 அரசாங்கத்தின் கடன்பெறுகை நிகழ்ச்சித் திட்டம் - 2016

2016 ஆண்டுக்காகப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நகல் ஒதுக்கீட்டுச் சட்டத்தில் வள இடைவெளிக்கு நிதியீட்டம் செய்வதற்கான கடன்பெறுகை எல்லை 1,699 பில்லியன் ரூபாவாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழ் பாராளுமன்றம் இதற்கு அங்கீகாரம் வழங்கியது.

மேற்குறித்த 1,699 பில்லியன் ரூபா கடன்பெறுகை எல்லையில், 2016 ஆம் ஆண்டுக்கான உண்மையான மொத்தக் கடன்பெறுகை 1,519 பில்லியன்

ரூபாவாகக் காணப்பட்டது. இதில் 945 பில்லியன் ரூபா உள்நாட்டு மூலங்களிலிருந்தும் 574 பில்லியன் ரூபா வெளிநாட்டு மூலங்களிலிருந்தும் பெறப்பட்டிருந்தன. வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெறப்பட்ட கடன்பெறுகைகளில் வெளிநாட்டுச் சந்தையில் விநியோகிக்கப்பட்ட 218 பில்லியன் ரூபா பெறுமதியான நாணய முறிகள், 102 பில்லியன் வெளிநாட்டு நிதி நிபந்தனைக் கடன்கள், அபிவிருத்திக் கொள்கை, செயற்திட்ட மற்றும் நிகழ்ச்சித்திட்டக்கடன் 254 பில்லியன் ரூபா என்பன உள்ளடங்கும். 2016 ஆம் ஆண்டின் மொத்தக் கடன்பெறுகை 1,519 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இது 2015 ஆம் ஆண்டின் 1,745 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 13 சதவீத வீழ்ச்சியாகும்.

2016 ஆம் ஆண்டிற்கான உண்மை மொத்தத் உள்நாட்டுக் கடன்பெறுகை 945 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. இது 2015 ஆம் ஆண்டின் 1,188 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 20 சதவீத வீழ்ச்சியாகும். இந்த வீழ்ச்சிக்குப் பிரதான காரணம் 2016 ஆம் ஆண்டில் அரச வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட வங்கி மேலதிகப்பற்றுக்களும் இலங்கை மத்திய வங்கியிடமிருந்து பெறப்பட்ட தற்காலிக முற்பணங்களின் ஒரு பகுதியும் தீர்க்கப்பட்டமையாகும்.

**அட்டவணை 7.2.1** அரசாங்க கடன்பெறுகை வரையறைகள் மற்றும் பயன்பாடு (ரூபா மில்லியன்)

| | 2015 | | 2016 | |
|---|---|---|---|---|
| **விடயம்** | **அனுமதிக்கப்பட்ட வரையறை** | **பயன்பாடு** | **அனுமதிக்கப்பட்ட வரையறை** | **பயன்பாடு** |
| **மொத்தக் கடன்பெறுகைகள்** | **1,780,000** | **1,744,524** | **1,699,000** | **1,519,485** |
| உள்நாட்டு | 1,222,000 | 1,188,154 | 1,180,000 | 945,236 |
| வெளிநாட்டு | 558,000 | 556,370 | 519,000 | 574,249 |
| **மொத்த நிதியீட்டம்** | **1,780,000** | **1,744,524** | **1,699,000** | **1,519,485** |

*மூலங்கள்: திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கி*

## 7.2.2 உள்நாட்டு நிதியீட்டம்

### 7.2.2.1 தேறிய உள்நாட்டு நிதியீட்டம் (NDF)

வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறைக்கு நிதியீட்டம் செய்வதற்காக 2016 ஆம் ஆண்டில் உள்நாட்டு மூலங்களிலிருந்து பெறப்பட்ட கடன்கள் 58 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 248 பில்லியன்ரூபாவாகக் காணப்பட்டது. இது வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையில் 38 சதவீதமாகும். 2016 ஆம் ஆண்டில் பற்றாக்குறைக்கு நிதியீட்டம் செய்வதற்காக சந்தைப்படுத்தக்கூடிய படுகடன் சாதனங்கள் மூலம் பெறப்பட்ட மொத்தத் தேறிய கடன்பெறுகை 328 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட அதேவேளை

சந்தைப்படுத்த முடியாத படுகடன் மீளளிப்புக்கள் 79.4 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.

2016 ஆம் ஆண்டில், சந்தைப்படுத்தக்கூடிய படுகடன் சாதனங்களின் ஊடாக தேறிய உள்நாட்டு நிதியீட்டத்திற்கான பங்களிப்பு 328 பில்லியன் ரூபாவாகக் காணப்படுகின்றமையானது, 2015 ஆம் ஆண்டின் 639 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவில் குறைந்துள்ளது.

இவ்வருடத்தில், மீளளிப்புக்களை விட விநியோகம் அதிகரித்தமையினால், திறைசேரி உண்டியல்கள் மூலமான கடன்பெறுகைகள் 98.5 பில்லியன் ரூபா தேறிய உட்பாய்ச்சலைக் கொண்டிருந்தன. 2015 ஆம் ஆண்டின் தேறிய வெளிப்பாய்ச்சலான 26.4 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டில் தேறிய உள்நாட்டு நிதியீட்டம் 39.6 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.2016 ஆம் ஆண்டில் 79.4 பில்லியன் ரூபா பெறுமதியான சந்தைப்படுத்த முடியாத பெறுகைக் மீளச் செலுத்தப்பட்டது. இது பிரதானமாக, இலங்கை மத்திய வங்கிக்கு மீளச்செலத்திய 67.8 பில்லியன் ரூபா தற்காலிக முற்பணத்தை உள்ளடக்கியுள்ளது.

**அட்டவணை 7.2:2 அரசாங்க வரவு செலவுத் திட்டத்திற்கான தேறிய உள்நாட்டு நிதியீட்டம் 2015 மற்றும் 2016**

| விடயம் | தொகை (ரூபா பில்லியன்) | | மொத்தத்தில் % ஆக | |
|---|---|---|---|---|
| | 2015 | 2016 | 2015 | 2016 |
| **வகையின் அடிப்படையில்** | **592.7** | **248.4** | **100.0** | **100.0** |
| சாதனங்கள் மூலமான கடன்பெறுகைகள் | 607.7 | 327.8 | 102.5 | 132.0 |
| திறைசேரி முறிகள்* | 442.6 | 349.8 | 74.7 | 140.8 |
| திறைசேரி உண்டியல்கள்* | -26.4 | 98.5 | -4.4 | 39.6 |
| ரூபாக் கடன்கள் | -31.4 | 0.0 | -5.3 | 0.0 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | 223.0 | -120.5 | 37.6 | -48.5 |
| சாதனமல்லாக் கடன்பெறுகை | -15.0 | -79.4 | -2.5 | -32.0 |
| மத்திய வங்கியிடமிருந்த பெறப்பட்ட தற்காலிக முற்பணங்கள் | 7.2 | -67.8 | 1.2 | -27.3 |
| ஏனையவை | -22.3 | -11.5 | -3.8 | -4.6 |
| **முதிர்ச்சியின் அடிப்படையில்** | **592.7** | **248.4** | **100.0** | **100.0** |
| நடுத்தரக் காலம் முதல் நீண்ட காலம் வரை | 634.1 | 229.3 | 107.0 | 92.3 |
| திறைசேரி முறிகள்* | 442.6 | 349.8 | 74.7 | 140.8 |
| ரூபாக் கடன்கள் | -31.4 | 0.0 | -5.3 | 0.0 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | 223.0 | -120.5 | 37.6 | -48.5 |
| குறுங்காலம் | -41.4 | 19.1 | -7.0 | 7.7 |
| திறைசேரி உண்டியல்கள்* | -26.4 | 98.5 | -4.4 | 39.6 |
| மத்திய வங்கியிடமிருந்த பெறப்பட்ட தற்காலிக முற்பணங்கள் | 7.2 | -67.8 | 1.2 | -27.3 |
| ஏனையவை | -22.3 | -11.5 | -3.8 | -4.6 |
| **சந்தைப்படுத்தக்கூடிய தன்மையின் அடிப்படையில்** | **592.7** | **248.4** | **100.** | **100.0** |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 0 | |
| சந்தைப்படுத்தக்கூடியவை | 639.2 | 327.8 | 107.8 | 132.0 |
| திறைசேரி உண்டியல்கள்* | -26.4 | 98.5 | -4.4 | 39.6 |
| திறைசேரி முறிகள்* | 442.6 | 349.8 | 74.7 | 140.8 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | 223.0 | -120.5 | 37.6 | -48.5 |
| சந்தைப்படுத்த முடியாதவை | -46.5 | -79.4 | -7.8 | -32.0 |
| **உரிமையின் அடிப்படையில்** | **592.7** | **248.4** | **100.0** | **100.0** |
| வங்கிகள் | 291.8 | 139.9 | 49.2 | 56.3 |
| மத்திய வங்கி | 80.3 | 183.0 | 13.5 | 73.7 |
| வர்த்தக வங்கிகள் | 211.6 | -43.1 | 35.7 | -17.4 |
| வங்கியல்லாத் துறை | 300.9 | 108.5 | 50.8 | 43.7 |

*மூலங்கள்: திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கி*

** வதியாதோரின் முதலீடுகள் நீங்கலாக*


### 7.2.3 நிலுவையாகவுள்ள உள்நாட்டுப் படுகடன்

அரசாங்கத்தின் 2016 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான மொத்த உள்நாட்டுப் படுகடனில், திறைசேரி முறிகள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகள் என்பன முறையே 69.5 சதவீதமாகவும் 14.6 சதவீதமாகவும் 10.7 சதவீதமாகவும் காணப்பட்டதுடன் 2015 ஆம் ஆண்டின் இறுதியில் 13.3 சதவீதமாகக் காணப்பட்ட திறைசேரி உண்டியல்கள் 2016 ஆம் ஆண்டின் இறுதியில் 14.6 சதவீதமாக அதிகரித்திருந்தது. மீதமுள்ள பகுதி, இலங்கை மத்திய வங்கியிடமிருந்து பெறப்பட்ட தற்காலிகமாக முற்பணங்கள் (1.6 சதவீதம்), ரூபாக் கடன்கள் (0.5 சதவீதம்) ஏனைய கடன்கள் (2.9 சதவீதம்) என்பவற்றின் மூலம் பெறப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டில் 3 சதவீதமாகக் காணப்பட்ட இலங்கை மத்திய வங்கியிடமிருந்து பெறப்பட்ட தற்காலிக முற்பணங்கள், அரசாங்கத்தினால் முற்பணங்களின் ஒரு பகுதி தீர்க்கப்பட்டமையினால் 2016 ஆம் ஆண்டில் 1.6 சதவீதமாகக் குறைந்திருந்தது.

திறைசேரி முறிகளின் கையிருப்பு 2016 ஆம் ஆண்டில் 8 சதவீதத்தால் அதிகரித்து 3,715 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட அதேவேளை 2015 ஆம் ஆண்டில் பதிவாகிய தொகையுடன் ஒப்பிடுகையில் திறைசேரி உண்டியல்களின் கையிருப்பு 2 சதவீதத்தால் அதிகரித்து 780 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. 2016 ஆம் ஆண்டின் இறுதியில் இலங்கை அபிவிருத்தி முறிகளின் கையிருப்பு 2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 572 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.

### 7.2.3.1 உள்நாட்டுப் படுகடன்களின் மூதிர்வுக் கட்டமைப்பு

2016 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான மொத்த உள்நாட்டுப் படுகடனில், நடுத்தர மற்றும் நீண்ட காலப் படுகடன்கள் 82 சதவீதமாகக் காணப்பட்ட அதேவேளை குறுகிய காலப் படுகடன் 18 சதவீதமாகக் காணப்பட்டது.




நடுத்தர முதல் நீண்ட காலம் வரையான மொத்தப் படுகடன்களில் திறைசேரி முறிகள் 3,715 பில்லியன் ரூபாவாக அல்லது 85 சதவீதமாகக் காணப்பட்ட அதேவேளை மீதமுள்ள 15 சதவீதத்தில் இலங்கை அபிவிருத்தி முறிகள் (13 சதவீதம்), ரூபாக் கடன்கள் (0.6 சதவீதம்) ஏனைய கடன்கள் (1.4 சதவீதம்) என்பன உள்ளடங்கியிருந்தன.

**அட்டவணை 7.2.3: 2016 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான உள்நாட்டுப் படுகடன்களின் முதிர்வுக் கட்டமைப்பு (ரூபா.மில்லியன்)**

| முதிர்ச்சிய டையும் வருடம் | சாதனம் | | | | மொத்தம் | முதிர்ச்சி மொத்தப் பெறுமதி யின் % ஆக |
|---|---|---|---|---|---|---|
| | திறைசேரி உண்டியல் கள் | திறைசேரி முறிகள் | ரூபாக் கடன்கள் | இலங்கை அபிவிருத் தி முறிகள் | | |
| 2017 | 792,396.36 | 414,923.21 | - | 281,328.89 | 1,488,648.46 | 27.35% |
| 2018 | - | 606,249.04 | - | 254,992.56 | 861,241.60 | 15.83% |
| 2019 | - | 397,232.91 | - | 7,864.50 | 405,097.41 | 7.44% |
| 2020 | - | 271,090.95 | - | 28,012.60 | 299,103.55 | 5.50% |
| 2021 | - | 266,167.15 | - | - | 266,167.15 | 4.89% |
| 2022 | - | 300,914.75 | - | - | 300,914.75 | 5.53% |
| 2023 | - | 189,675.32 | 24,088.00 | - | 213,763.32 | 3.93% |
| 2024 | - | 148,655.83 | - | - | 148,655.83 | 2.73% |
| 2025 | - | 174,610.90 | - | - | 174,610.90 | 3.21% |
| 2026 | - | 256,291.45 | - | - | 256,291.45 | 4.71% |
| 2027 | - | - | - | - | - | - |
| 2028 | - | 232,438.92 | - | - | 232,438.92 | 4.27% |
| 2029 | - | 104,872.88 | - | - | 104,872.88 | 1.93% |
| 2030 | - | 96,102.00 | - | - | 96,102.00 | 1.77% |
| 2031 | - | - | - | - | - | - |
| 2032 | - | 134,365.35 | - | - | 134,365.35 | 2.47% |
| 2033 | - | 144,976.50 | - | - | 144,976.50 | 2.66% |
| 2034 | - | 77,858.98 | - | - | 77,858.98 | 1.43% |
| 2035 | - | 74,565.00 | - | - | 74,565.00 | 1.37% |
| 2036 | - | - | - | - | - | - |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2037 | - | - | - | - | - | - |
| 2038 | - | - | - | - | - | - |
| 2039 | - | - | - | - | - | - |
| 2040 | - | - | - | - | - | - |
| 2041 | - | 29,885.00 | - | - | 29,885.00 | 0.55% |
| 2042 | - | - | - | - | - | - |
| 2043 | - | 33,809.25 | - | - | 33,809.25 | 0.62% |
| 2044 | - | 88,831.61 | - | - | 88,831.61 | 1.63% |
| 2045 | - | 10,058.00 | - | - | 10,058.00 | 0.18% |
| **மொத்தம்** | **792,396.36** | **4,053,574.99** | **24,088.00** | **572,198.55** | **5,442,257.90** | **100.00%** |

### 7.2.3.2 உள்நாட்டுப் படுகடன் சேவைக் கொடுப்பனவுகள்

அரசாங்கத்தின் படுகடன் சேவைக் கொடுப்பனவுகள், 2015 ஆம் ஆண்டில் பதிவாகிய 918 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டில் 15 சதவீதத்தால் அதிகரித்து 1,057 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. மொத்தப் படுகடன் சேவைக் கொடுப்பனவில் கடனழிவு 572 பில்லியன் ரூபாவாக (54 சதவீதமாக) காணப்பட்ட அதேவேளை மீதி 484 பில்லியன் ரூபா (46 சதவீதம்) வட்டிக் கொடுப்பனவாகக் காணப்பட்டது. முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டில் உள்நாட்டுப் படுகடன் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் முறையே 49 பில்லியன் ரூபாவினாலும் 90 பில்லியன் ரூபாவினாலும் அதிகரித்துள்ளது.

2015 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 8.2 ஆகக் காணப்பட்ட மொத்த உள்நாட்டுப் படுகடன் சேவைக் கொடுப்பனவுகள் 2016 ஆம் ஆண்டில் அதிகரித்து 8.9 சதவீதமாகக் காணப்பட்டது. 2015 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 3.6 சதவீதமாகக் காணப்பட்ட உள்நாட்டு வட்டிக் கொடுப்பனவுகள் 4.1 சதவீதமாக அதிகரித்துள்ள அதேவேளை உள்நாட்டுக் கடனழிவுக் கொடுப்பனவுகள் 2015 மற்றும் 2016 ஆகிய இரண்டு வருடங்களிலும் 4.8 சதவீதமாகக் காணப்பட்டது. 2016 ஆம் ஆண்டில் வருமானம் அதிகரிப்பு படுகடன் சேவை அதிகரிப்பை விட அதிகமாக இருந்தமையினால், மொத்த அரசாங்க வருமானத்தில் உள்நாட்டுப் படுகடன் சேவைக் கொடுப்பனவுகளின் அளவு 63.1 சதவீதத்திலிருந்து 62.7 சதவீதமாகக் வீழ்ச்சியடைந்துள்ளது. 15.9 வருமான அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 15.1 படுகடன் சேவைக் கொடுப்பனவு அதிகரிப்பு, அரசாங்கத்தின் வருமானத்தில் உள்நாட்டுப் படுகடன் சேவைக் கொடுப்பனவுகள் 2016 ஆம் ஆண்டி9ல் 62.7 சதவீதத்திலிருந்து 63.1 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளதைக் காட்டுகின்றது.

அட்டவணை : **உள்நாட்டுப் படுகடன் சேவைக் கொடுப்பனவுகள்**

(ரூபா.மில்லியன்)

| **வருடம்** | **மூலதனக் கொடுப்பனவுகள்** | **வட்டிக் கொடுப்பனவுகள்** | **மொத்தம்** |
|---|---|---|---|
| 2006 | 247,536 | 133,787 | 381,323 |
| 2007 | 252,165 | 161,370 | 413,535 |
| 2008 | 258,720 | 182,198 | 440,918 |
| 2009 | 401,296 | 273,977 | 675,273 |
| 2010 | 389,672 | 297,127 | 686,799 |
| 2011 | 439,894 | 288,134 | 728,028 |
| 2012 | 415,441 | 317,659 | 733,100 |
| 2013 | 496,042 | 354,706 | 850,748 |
| 2014 | 449,554 | 327,934 | 777,488 |
| 2015 | 523,824 | 394,289 | 918,113 |
| 2016 | 572,442 | 484,182 | 1,056,624 |

*மூலங்கள்: திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களம், அரசாங்க கணக்குகள் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி*

## 7.3 வெளிநாட்டு உதவி முகாமை

மீள்பகிரத்தக்க வெளிநாட்டு உதவிகள் முறைமையின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்திட்டங்களுக்கு கட்டுநிதிகள் ஒன்றில் செயற்திட்டத்திற்கு நேரடியாக நிதிகளை விடுவிப்பதன் மூலம் அல்லது உரிய அமைச்சின் ஊடாக செயற்திட்டத்துக்கு விடுவிப்பதன் மூலம் வழங்கப்பட்டன. மீள்பகிரத்தக்க வெளிநாட்டு உதவிகளின் கீழ்2016 ஆம் ஆண்டில் 6486 மில்லியன் ரூபா விடுவிக்கப்பட்டதுடன், அதில் 3363 மில்லியன் ரூபா மீள அறவிடத்தக்க முறையிலும் மீதி 3123 மில்லியன் ரூபா இச்செயற்திட்டங்கங்களின் உள்நாட்டு நிதியீட்டத்திற்காகவும் வழங்கப்பட்டன. மீளவழங்கலின் சுருக்கம் பின்வருமாறு காணப்பட்டது.

| | ரூபா மில்லியன் |
|---|---|
| 2016.01.01 இல் உள்ளவாறான நிலுவை மீளளிப்பு | 1473 |
| **<u>கூட்டுக</u>** | |
| நிதியிடல் முகவர்கள் மீளளிப்புச் செய்யப்பட்ட மீள்பகிரத்தக்க வெளிநாட்டு உதவி முறையின் கீழான செலவுகள் | 2917 |
| **<u>கழிக்குக</u>** | |
| 2016 ஆம் ஆண்டில் நிதியிடல் முகவரினால் மீளளிப்புச் செய்யப்பட்டவை | (2348) |
| 2016.12.31 இல் நிலுவையாகவுள்ள மீளளிப்பு | 2042 |

2016 ஆம் ஆண்டில் கிடைத்த மொத்த வெளிநாட்டு உதவி 7496 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. அதில் 679 மில்லியன் ரூபா பொருட்களாகவும் உபகரணங்களாகவும் 6817 மில்லியன் ரூபா காசாகவும் கிடைத்ததது.

உதவி வழங்கும் முகவர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் நிதிகளை பல்வேறு செயற்திட்டங்களுக்கு வழங்கும் நோக்கத்திற்காக மத்திய வங்கி கட்டுநிதிக் கணக்குகளைப் பேணி வருகின்றது. 2016 ஆம் ஆண்டில் திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களம் அத்தகைய 13 புதிய கட்டுநிதிக் கணக்குகளை ஆரம்பிப்பதற்கான வசதி ஏற்பாடுகள் செய்து கொடுத்தது. இதன் மூலம் 2016 இறுதியில் மொத்தக் கணக்குகளின் எண்ணிக்கை 100 ஆக அதிகரித்திருந்தது. 2016 ஆம் ஆண்டில் உதவி வழங்கும் முகவர்களிடமிருந்து இக்கணக்குகளுக்கு 26,623 மில்லியன் ரூபா கிடைக்கப்பெற்றது. இந்த கட்டுநிதிக் கணக்குகளிலுள்ள நிதிகளில் 31,885 மில்லியன் ரூபா 2016 ஆம் ஆண்டில் அபிவிருத்திக் செயற்திட்டங்களுக்காக விடுவிக்கப்பட்டது

## *7. 4. அரசாங்க வருமானம்*

### *7.4.1. வருமானம் சேகரித்தல்:*

*திறைசேரித் தொழிற்பாடுகள் பணிப்பாளர் நாயகம் 10 வருமானத் தலைப்புக்களுக்கான கணக்கீட்டு உத்தியோகத்தராகத் தொழிற்படுகின்றார். அவற்றில் இரண்டு தலைப்புக்கள் மூலதன மற்றும் துணைக் கடன்களுக்கான தவணைக் கொடுப்பனவுகள் தொடர்பானவையாகும். மீதி 8 வருமானத் தலைப்புக்களும் ஒரு தனியான திணைக்களத்துக்கு அல்லது அமைச்சுக்கு நேரடியாக ஒதுக்கப்பட முடியாத வருமானங்களைச் சேகரிப்பதற்கான தலைப்புக்களாகும்.* பின்வரும் 10 வரியல்லா வருமானத் தலைப்புக்களின்கீழ் 68.3 பில்லியன் ரூபாவை வரியல்லா வருமானமாக இத்திணைக்களம் சேகரித்தது. இது மீளாய்வாண்டுக்கான மொத்த வரியல்லா வருமான மதிப்பீடான 208 பில்லியன் ரூபாவின் 32.7 சதவீதமாகும்.

அட்டவணை 7.4 (அ): வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற வகையில் திறைசேரிச் செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகத்தினால் சேகரிக்கப்பட்ட வரியல்லா வருமானங்கள் - 2015-2016

(ரூபா. மில்)

| வருமான விபரம் | 2015 | | 2016 | |
|---|---|---|---|---|
| | வருமான மதிப்பீடு | சேகரிக்கப்பட்ட வருமானம் | வருமான மதிப்பீடு | சேகரிக்கப்பட்ட வருமானம் |
| **வரியல்லா வருமானம்** | | | | |
| ஏனைய வாடகைகள் | 200.0 | 95.0 | 250.0 | 7,188.0 |
| கடன் வழங்கல் வட்டி | 3,850.0 | 3,544.8 | 4,250.0 | 3,954.0 |
| ஏனைய வட்டி | 1,400.0 | 953.5 | 1,000.0 | 872.3 |
| திணைக்கள விற்பனைகள் | 110.0 | 143.1 | 120.0 | 139.0 |
| நானாவிதமானவை | 5,500.0 | 4,710.4 | 6,000.0 | 16,073.6 |
| தண்டங்கள் மற்றும் பறிமுதல்கள் - ஏனையவை | 1,000.0 | 962.0 | 1,000.0 | 1,967.7 |
| ஏனைய பெறுகைகள் | 18,800.0 | 9,342.8 | 10,000.0 | 16,824.3 |
| ஏனைய நடைமுறை மாற்றல்கள் | 2,000.0 | 1,935.5 | 2,000.0 | 2,230.9 |
| மூலதனச் சொத்துக்களின் விற்பனை | 350.0 | 97.9 | 300.0 | 407.2 |
| துணைக் கடன் மீள் அறவீடு | 14,000.0 | 12,960.8 | 14,000.0 | 18,619.4 |
| **வரியல்லா வருமானம் உப மொத்தம்** | **47,210** | **34,745.8** | **38,920.0** | **68,276.4** |

*திறைசேரித் தொழிற்பாடுகள் பணிப்பாளர் நாயகம், 10 வரியல்லா வருமானச் சேகரிப்புத் தலைப்புக்களுக்கு மேலதிகமாக வெளிநாட்டு உதவிகளுக்கான வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராகவும் தொழிற்படுகின்றார்.* இத்திணைக்களம் 2016 ஆம் ஆண்டில் 7.4 பில்லியன் ரூபாவை வெளிநாட்டு உதவியாகச் சேகரித்தது. அந்த வகையில், மீளாய்வாண்டில் இத்திணைக்களம் 11 வருமானத் தலைப்புக்களின் மூலம் 75.7 பில்லியன் ரூபாவை வருமானமாகச் சேகரித்துள்ளது.

## *7.4.2 திறைசேரியின் துணைக் கடன்கள்*

*அரசாங்கம், நாட்டின் அபிவிருத்திச் செயன்முறைக்கான உட்கட்டமைப்புத் தேவைப்படுகளை மேம்படுத்துவதற்குச் செயலூக்கமிக்க பங்களிப்பை வழங்கும் பொதுத் தொழில்முயற்சிகளுக்கு துணைக் கடன்களை வழங்குகின்றது கடன் மீளளிப்புக்கள், வட்டி உள்ளிட்ட துணைக் கடன்களின் தவணைப் பணங்களை அறவிடுவது திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் பிரதான தொழிற்பாடுகளில் ஒன்றாகும். இத்திணைக்களம் இது தொடர்பான மாதாந்தம் இற்றைப்படுத்தப்படும் தரவுத் தளமொன்றைப் பேணி வருகின்றது.*

இத்திணைக்களம் 9.18 பில்லியன் ரூபாவை புதிய துணைக் கடன்களாக விடுவித்ததுடன் பொதுத் தொழில்முயற்சிகளிடமிருந்து 18.62 பில்லியன் ரூபா துணைக் கடன் தவணைப் பணத்தை சேகரித்தது. அத்துடன் துணைக் கடன்களுக்கான வட்டியாக ரூபா 3.95 பில்லியன் அறவிடப்பட்டது.


பொதுத் தொழில்முயற்சிகள், வர்த்தக வங்கிகள், அபிவிருத்தி வங்கிகள், பிராந்திய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட 53 அரசாங்க நிறுவனங்களுக்கு பிரதானமாக வழங்கப்பட்ட துணைக் கடன்களின் 2016.21.31 ஆந் திகதியில் உள்ளவாறான நிலுவையாகவுள்ள மொத்த மீதி 169.55 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. *உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பானிய முகவரகம் என்பன போன்ற கொடை வழங்குநர்களிடமிருந்த சலுகை அடிப்படையில் கிடைக்கப்பெறும் பயன்படுத்தி இந்தத் துணைக் கடன்கள் வழங்கப்படுகின்றன.*

### *7.4.3 திறைசேரி உத்தரவாதங்கள்*

*பொதுத் தொழில்முயற்சிகள் 2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க அரசிறை முகாமை (ப் பொறுப்புச்) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு உட்பட்ட வகையில் நிதி நிறுவனங்களிடமிருந்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்களைப் பெறுவதற்கு கடன் உத்தரவாதங்களைச் சமர்ப்பிக்குமாறு அத்தொழில்முயற்சிகளிடம் கோரப்படுகின்ற போது திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களம் அத்தொழில்முயற்சிகளுக்கு திறைசேரி உத்தரவாதங்களையும் நாணய உத்தரவாதங்களையும் வழங்குகின்றது.*

*2016 ஆம் ஆண்டின் இறுதி வரையில் திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களம் 824.73 பில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உத்தரவாதங்களையும் நாணய உத்தரவாதங்களையும் வழங்கியிருந்தது. அவற்றில் 42.31 சதவீதமான உத்தரவாதங்கள் மின்சக்தி மற்றும் எரிசக்தித் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது.*

*வரைபு 7.4 (ஆ) திறைசேரி உத்தரவாதங்களின் துறைவாரியான உள்ளடக்கம் 2016*




## 7.5 திறைசேரி தனிக் கணக்கு முறைமை மற்றும் திறைசேரி நிதி முகாமை முறைமை

அரசாங்க அமைச்சுக்களினதும் திணைக்களங்களினதும் பயனுறுதி வாய்ந்ததும் வினைத்திறன்மிக்கதுமான நிதி முகாமைக்கு பொருத்தமான வங்கி முறைமையொன்று காணப்படுவது அவசியமாகும். நாட்டிலுள்ள வங்கி முறைமையை வலையமைப்பொன்றின் மூலம் இணைத்ததன் ஊடாக அரச நிதிகளைப் பயனுறுதி வாய்ந்ததும் வினைத்திறன்மிக்கதுமான முறையில் பயன்படுத்தும் நோக்கில், 2007 ஆம் ஆண்டில் திறைசேரி தனிக் கணக்கு முறைமையொன்றைத் திறைசேரி அறிமுகப்படுத்தியது.

2016.12.31 ஆந் திகதி வரையில் திறைசேரி தனிக் கணக்கு முறைமையின் கீழ் திறைசேரியின் பிரதிச் செயலாளரின் பெயரில் 2374 உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகள் காணப்பட்டன. பின்வரும் அட்டவணை அக்கணக்குகளின் வங்கி அடிப்படையிலான பரம்பலைக் காட்டுகின்றது.


**அட்டவணை 7.5 (அ ): திறைசேரி தனிக் கணக்கு முறைமையின் கீழுள்ள உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகள்**

| | இலங்கை வங்கி | மக்கள் வங்கி | இலங்கை மத்திய வங்கி | மொத்தம் |
|---|---|---|---|---|
| திறைசேரி தனிக் கணக்கு முறைமையின் கீழுள்ள உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகள் | 1,580 | 766 | 0 | 2,346 |
| திறைசேரியின் பிரதிச் செயலாளரின் பெயரில் பேணி வரப்படும் பிரதான உத்தியோகபூர்வ வங்கிக் கணக்குகள் | 1 | 1 | 4 | 6 |
| திறைசேரி தனிக் கணக்கு முறைமைக்கு வெளியே உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் பேணி வரப்படும் சேகரிப்புக் கணக்குகள் | 16 | 6 | 0 | 22 |
| **மொத்தம்** | **1,597** | **773** | **4** | **2,374** |

திறைசேரி தனிக் கணக்கு முறைமையை அறிமுகம் செய்ததன் ஊடாக வங்கிகளுடனான நிதிக் கொடுக்கல் வாங்கல்களை பயனுறுதி வாய்ந்த முறையில் சிக்கனமாக முகாமை செய்ததன் மூலம் திறைசேரியின் பிரதிச் செயலாளரின் பிரதான கணக்குகள் மீதான வங்கி மேலதிகப்பற்றுக்களையும் அவற்றுக்கான செலவுகளையும் குறைக்க முடிந்தது. அதனால், திறைசேரி தனிக் கணக்கு முறைமை நாடு முழுவதிலும் உள்ள அரசாங்க வங்கிக் கணக்குகளில் காசு மீதிகள் பயன்படுத்தப்படாதிருப்பதைத் தவிர்க்க முடிந்துள்ளது.

2016 ஆம் ஆண்டில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அமைச்சுகள், திணைக்களங்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் என்பற்றிலுள்ள அரசாங்கத்தின் கணக்குகளிலுள்ள நாளாந்தச் சராசரிக் காசு மீதி அண்ணளவாக 55 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. திறைசேரி தனிக் கணக்கு முறைமையின் ஊடாகத் திறைசேரியின் பிரதிச் செயலாளரின் பிரதான கணக்குகளுக்குத் இந்த கணக்கு மீதிகளைத் தற்காலிகமாகப் பயன்படுத்தக்கூடியதாக இருப்பதனால் ரூபா 5.33 பில்லியன் ரூபா வட்டிச் செலவினம் சேமிக்கப்பட்டது. திறைசேரி தனிக் கணக்கு முறைமை இல்லாதவிடத்து மேலதிகப்பற்றுக்கான மொத்த வட்டிச் செலவு 54 சதவீதத்தால் அதிகரித்திருக்கும். இந்நிலைமையைப் பின்வரும் வரைபு விலக்குகின்றது.

### வரைபு 7.5(ஆ) - தனிக் கணக்கு முறைமையின் செயலாற்றுகை - 2016




நிதி முகாமைத் தகவல்களுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்து முறைமையின் பயனர்-நட்புறவுத் தன்மையை உறுதிப்படுத்தும் நோக்கில் 2008 ஆம் ஆண்டில் திறைசேரி நிதி முகாமை முறைமை (TFMS) அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறைமையின் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான முகாமைத்துவ மீளாய்வுகளின் விளைவாக, இம்முறைமையின் தொழில்நுட்ப மற்றும் ஏனைய பராமரிப்புக்கும் மேம்பாட்டுக்கும் பொறுப்பாகவுள்ள வாடிக்கையாளர் நிறுவனத்தினால் 2016 ஆம் ஆண்டில் இம்முறைமை மேலும் மேம்படுத்தப்பட்டது.இந்த முறைமையினுள் முகாமைத்துவ அறிக்கைகளை தயார்படுத்தக்கூடியதாக உள்ளமை திணைக்களத்தினால் அன்றாடம் எடுக்கப்படும் முக்கியமான முகாமைத்துவத் தீர்மானங்களுக்குப் பெரிதும் உதவியாக அமைந்துள்ளது. இம்முறைமையானது திரட்டு நிதியத்தின் பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகள் உள்ளிட்ட அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களையும் மேற்கொள்வதற்கான வசதிகளைக் கொண்டுள்ளதுடன் நாள் முடிவுக் காசு நிலைமை அறிக்கையையும் முகாமைத்துவத்தின் மதிப்பீட்டு வழங்குகின்றது. இந்த முறைமையின் ஊடாகத் தயாரிக்கப்படும் தகவல்கள் பயனுறுதி வாய்ந்த தீர்மானம் எடுத்தலுக்கான ஒரு முகாமைத்துவக் கருவியாக உயர் முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்படுகின்றது.

2016 ஆம் ஆண்டில் திறைசேரிச் செயற்பாட்டு திணைக்களம் மொத்தமாக ரூபா 4,385.5 பில்லியன் ரூபாவைப் பெறுகையாகப் பெற்றதுடன் மொத்தக் கொடுப்பனவு ரூபா 4,417.3 பில்லியனாகப் பதிவாகியது. இந்தப் பெறுகைகள் மற்றும் கொள்வனவுகள்

அனைத்தும் முறையே 9,683 உட்செலுத்துகை வவுச்சர்களின் மூலமும் 19,127 கொள்வனவு வவுச்சர்களின் மூலமும் மேற்கொள்ளப்பட்டன. இக்கொடுப்பனவு வவுச்சர்களில், 17,382 கொடுக்கல் வாங்கல் வவுச்சர்கள் இலங்கை மத்திய வங்கி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி என்பவற்றின் ஊடாக இலத்திரனியல் நிதி மாற்ற முறைமையைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டன. இது மொத்தக் கொடுக்கல் வாங்கல்களில் 90.88 % ஆகும். மேலும், 9683 செலுத்தல் வவுச்சர்களில் 2016 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற மொத்த வவுச்சர்களில் 76.65 சதவீதமாகிய 7422 கொடுக்கல் வாங்கலக்கான கொடுப்பனவுகள் காசோலைகளைப் பயன்படுத்தாது இலத்திரனியல் நிதி மாற்றலின் ஊடாகச் செலுத்தப்பட்டன. இவை தவிர வங்கிகளுககு இடையிலான 964.8 பில்லியன் ரூபா பெறுமதியான 339 வங்கிப் பரிமாற்றங்கள் அதே நேர மொத்த உள்ளீட்டுத் தீர்ப்பனவு (Real Time Gross entry Settlement -RTGS) முறையின் ஊடாக மேற்கொள்ளப்பட்டன.

## 7.6 ஆதனக் கடன் உத்தரவாத நிதியம்

ஒவ்வொரு அரசாங்க ஊழியருக்கும் வீட்டு ஆதனம் போன்ற பெறுமதியான சொத்தொன்றை பெற்றுக் கொள்வதற்கான வசதி ஏற்பாட்டைச் செய்து கொடுக்கும் நோக்கில் 2005 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் வங்கி முறைமையின் ஊடாக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான புதிய கடன் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

கடன் உத்தரவாத நிதியமானது கடன்பெற்றவர்களின் மரணம் அல்லது நிரந்தர அங்கவீனத்தின் காரணமாக வங்கிகளுக்கு ஏற்படக்கூடிய இழப்புச் சாத்தியங்களைத் தணிக்கும் நோக்கில் திறைசேரித் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் தாபிக்கப்பட்டது.

இந்த வகையில் திறைசேரி முறிகளை விதை மூலதனமாக விநியோகிப்பதன் மூலம் இந்நிதியம் 916 மில்லியன் ரூபா ஆரம்ப முதலீட்டுடன் 2005.08.95 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இந்த முதலீடு 2016.12.31 ஆந் திகதி வரையில் 1,134 மில்லியன் ரூபா வரையில் முன்னேற்றகரமாக அதிகரித்துள்ளது.

**அட்டவணை 7.6 (அ): ஆதனக் கடன் உத்தரவாத நிதியத்தின் மூலம் செய்யப்பட்ட தீர்ப்பனவுகளின் முன்னேற்றம் 2005 - 2016**

| வருடம் | 2005 -2014 | 2015 | 2016 | மொத்தம் |
|---|---|---|---|---|
| மரணித்த/ நிரந்தரமாக அங்கவீனமுற்ற/மருத்துவக் காரணங்களுக்காக ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | 362 | 77 | 106 | 545 |
| மொத்தத் தீர்ப்பவனவு ரூபா. மில் | 267.7 | 65.3 | 90.5 | 423.5 |

மேலே தரப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளது போன்று, மரணித்த/ நிரந்தரமாக அங்கவீனமுற்ற/மருத்துவக் காரணங்களுக்காக ஓய்வுபெற்ற 545 அரசாங்க உத்தியோகத்தர்களின் கடன் மீதியான 423.5 மில்லியன் ரூபா உரிய அரசாங்க வங்கிகளுக்குச் செலுத்தப்பட்டதன் காரணமாக அவர்கள் பயனடைந்தனர். பயனுறுதி வாய்ந்ததும் வினைத்திறன்மிக்கதுமான நிதிய முகாமையின் ஊடாக அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும் வசதிகளை மேம்படுத்த வேண்டும் என்பதே திணைக்களத்தின் அவாவாகும்.